

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர திமுக சார்பில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் லியோனி ஆகியோர் சிறபுரையாற்றி கால்பந்து விளையாட்டில் வெற்றி பெற்ற அணிகளுக்கு ராயல் என்ஃபீல்டு எல்இடி டிவி மற்றும் ஆயிரம் பெண்களுக்கு சில்வர் பாத்திரம் வழங்கினார்கள் உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, ரிஷி சந்தோஷ், பி.டி.சி.செல்வராஜ், சி.ஜெரால்டு, காஞ்சனா சுதாகர், காயத்ரி ஸ்ரீதர், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், க.ஸ்ரீதர்,கி.வே. ஆனந்த் குமார், கே.சுரேஷ்குமார், எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர் மன்னன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா.புண்ணியகோட்டி, ப.அன்பழன், சௌந்தரராஜன், ஏ.ராஷீக், உள்பட பலர் உள்ளனர்



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று(18.06.2025) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் வருகின்ற ஜூலை மாதம் 14 அன்று நடைபெறவுள்ள குடமுழுக்கு பெருவிழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இணை ஆணையர்கள் சி. மாரியப்பன், கிருஷ்ணன், துணை ஆணையர்கள் எம்.சூரியநாராயணன், ஆர். பொன் சுவாமிநாதன், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திருமதி ப. சத்யபிரியா, அறங்காவலர்கள் நா. மணிச்செல்வம், தி.மு.பொம்மதேவன், வ.சண்முகசுந்தரம், தி. இராமையா, உதவி ஆணையர் திருமதி து.வளர்மதி, மாநகராட்சி மேற்கு மண்டலத் தலைவர் திருமதி சுவிதா விமல், மாமன்ற உறுப்பினர்கள் உசிலை சிவா, திருமதி சிவசக்தி ரமேஷ் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### அனைத்துத் துறைகளிலும் தனித்துவமான ஆளுமையாகத் திகழ்ந்தவர் கலைஞர்!

# கலைஞர் நூலக மாணவர் சந்திப்பில் இளம் பேச்சாளர் பொர்த்தி வினித் பேச்சு!





சென்னை, ஜூன்.19-

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளையொட்டி கழக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் 'கலைஞர் நூலகம்' அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 100 கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு, பள்ளிக் குழந்தைகள் முதல் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்கள் வரை பலருக்கும் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றன.

இதில் ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 17.06.2025 அன்று 109வது வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

இதில் கழக இளம் பேச்சாளர் அ.பெர்த்தி வினித் கலந்துகொண்டு, வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்து, வாசிப்பின் மூலம் அறிவு, தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைத்திறன் ஆகியவற்றைப் பெற முடியும் என்றார். மேலும், "ஆளுமை என்றாலே நம் நினைவுக்கு வருவது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். இலக்கியமா? கலைஞர்! திரைத்துறையா? கலைஞர்! அரசியலா? கலைஞர்! என, அவர் பயணித்த அனைத்துத் துறைகளிலும் தனித்துவமான ஆளுமையாக திகழ்ந்தார். அதற்கு முக்கியக் காரணம் அவருடைய வாசிப்புப் பழக்கமே. ஆகவே, வாசியுங்கள்! உங்களுக்கு விருப்பமான எந்தத் துறையாக இருந்தாலும், முதலில் அதைப் பற்றி வாசியுங்கள்" என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் என்.மோகன்வேல், ஜே.எம். எச்.இம்ரான், பகுதி அமைப்பாளர்கள் வ.வேல்குமார், புவனேஷ் ஸ்ரீ வட்சன், பகுதி துணை அமைப்பாளர் எஸ்.பிரதீப் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### மு.க.தமிழரசு – நே. சிற்றரசு – தயாநிதி மாறன் எம்.பி. – அன்பகம் கலை – நா.எழிலன் எம்.எல்.ஏ. – கௌதமன் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை!

சென்னை, ஜூன்.19-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும், மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக்குட்பட்ட வட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இன்று (19.06.2025 - வியாழக்கிழமை) மாலை 7.00 மணி அளவில் புலியூர் 2வது சந்து கோடம்பாக்கம், பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் புவி.பாலாஜி தலைமையில் நடைபெறுகிறது.

மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம் விளக்கு தொகுதிப் பொறுப்பாளர் வே.கௌதமன் ஆகியோர் கலந்து கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இதில் தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் நுங்கை வி.எஸ்.ராஜ், எம்.டி.ஆர்.நாதன், டி.ஜோஸ் டானியல், மாவட்டக் கழக நிர்வாகிகள் த.விக்டர், ஆர். என்.துரை, வி.எஸ்.கலை, ஏ. சங்கீதா, ஜே.எஸ்.அகஸ்டின் பாபு, பகுதி கழக நிர்வாகிகள்: ஸ்டெர்லிங் மோகன், என். பி.இதயத் பாஷா, ரா.பொன்னம்மாள், பொருளாளர் பா.கமலக்கண்ணன், வட்ட செயலாளர்கள் க.சிட்டிபாபு, வரதை த.பரி, ச.டேவிட் இன்பராஜ், த.குணசேகர், கே.எஸ். தினேஷ் பிரபு, மு.மோகன், மாவட்ட பிரதிநிதிகள் அ.குப்பன், எஸ்.பார்த்திபன், த. ஐசென்ட், என்.இ.சரவணன், கோ.தட்சிணாமூர்த்தி, பா. சுரேஷ், எம்.டி.ஆர்.புகழ், ஆர். சீனிவாசன், வி.என்.பாபு உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

பொருள் : வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், புதிய உறுப்பினர்கள் சேர்த்தல், வள்ளுவர் கோட்டம் திறப்பு விழா, கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் அறிக்கை விடுத்துள்ளார்.

### ஏ.கருணாகரன் தலைமை! மகாலட்சுமி கருணாகரன் எம்.சி முன்னிலை! ரூ.கீர்த்தனா சிறப்புரை!

# செம்பாக்கம் வடக்கு 37வது வட்ட பாக நிலை முகவர்கள் கூட்டம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ - ரபி அகமது ஆலோசனை வழங்கினர்!

காஞ்சிபுரம், ஜூன். 19

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுப்படியும், மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழிகாட்டுதலின்படி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் 37 வது வட்டப் பாக நிலை (BLA.2) முகவர்கள் கூட்டம் (14.06.2025 சனிக்கிழமை) மாலை 6 மணி முதல் 8 மணி வரை 223, 224, 225 ஆகிய பாகங்களுக்கும், (15.06.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை10 மணி முதல் 12 மணி வரை 226, 229, 231, ஆகிய பாகங்கள், மாலை 6 மணி முதல் 8 மணி வரை 233, 234, 235, ஆகிய 9 பாகங்களுக்கும் தனித்தனியாக, முறையே அந்தந்த பாக நிலை முகவர்களான ஆர். ராஜேஷ், எஸ்.செந்தில்குமார், இ.மகாலட்சுமி, வி.ராஜேந்திரன், எம்.லோகநாயகி, எம்.பாரதி, எச்.பாஸ்கரன், வி.ராஜாமணி, எஸ்.அன்பன் ஆகியோர் தலைமையிலும், வட்டக் கழகச் செயலாளர் எஸ்.மன்னாராஜா கண்ணா, பாக ஒருங்கிணைப்பாளர் எச்.பாஸ்கரன், வட்டக் கழக நிர்வாகிகள் ராகவன், பிரீத்தி பாய், தினகரன், கண்ணன், எல்.ஆர்.சதீஷ்குமார், பழனி, நாகராஜன், மாவட்ட பிரதிநிதி க.ரமேஷ், பகுதி துணைச் செயலாளர் கி.பூபதி, மாநகரப் பிரதிநிதிகள் ம.பற்குணன், ஒ.தண்டபாணி, ஜி.ஜெகநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ரபி அகமது ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கினார்.

செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன், 37 வது வட்ட மாமன்ற உறுப்பினர் மகாலட்சுமி கருணாகரன், தலைமை கழக இளம் பேச்சாளர் செல்வி ரூ.கீர்த்தனா ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி பேசினார்கள்.

கூட்டங்களில் வட்டக் கழக செயலாளர்கள் எம்.சார்லஸ், ஆர்.ராதா கிருஷ்ணன், செம்பாக்கம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சி.ஆர்.நரேஷ்குமார், 37வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.சீனிவாசன், துணை அமைப்பாளர்கள் எம். தினேஷ், ஆர்.ஜெரில், கங்காதரன், ரவிச்சந்திரன் மற்றும் 37 வது வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், மகளிர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### சேலம் மத்திய மாவட்டத்தில்

# தொகுதி வாரியாக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



சேலம், ஜூன், 19-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து சேலம் மத்திய மாவட்டக் கழகத்திற்குட்பட்ட ஓமலூர், சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பாகநிலை முகவர்கள் (BLA-2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பார்.இளங்கோவன், ஓமலூர் தொகுதி பார்வையாளர் ஈ.ஜி.சுகவனம், சேலம் மேற்கு தொகுதி பார்வையாளர் பெத்தாம்பாளையம் இராஜசேகரன் மற்றும் சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மரு.விவேக் ஆகியோர் முன்னிலையில் கீழ்கண்ட தேதிகளில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய, பகுதிகளின் பொறுப்பாளர்கள், மாநகர வட்டக் கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, மற்றும் பேரூர் அமைப்பாளர் மற்றும்

துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**நாள்: 23. 06. 2025**

சேலம் மேற்கு சட்ட மன்றத் தொகுதி - காலை 10.00 மணி - DSK திருமண மண்டபம், இரும்பாலை மெயின்ரோடு.

ஓமலூர் சட்டமன்றத் தொகுதி - பிற்பகல் 03.00 மணி - M.R.P திருமண மண்டபம், ஓமலூர்.

**24. 06. 2025**

சேலம் தெற்கு சட்ட மன்றத் தொகுதி - காலை 10.00 மணி - கொங்கு திருமண மண்டபம், அம்மாபேட்டை.

சேலம் வடக்கு சட்ட மன்றத் தொகுதி - பிற்பகல் 03.00 மணி - மாநகராட்சி தொங்கும் பூங்கா.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கீழடி விவகாரம்: ஒன்றிய அரசின் உள்ளடி அரசியல்!

# ஒரு வரலாற்று உண்மையை வெளிப்படுத்திய நேர்மையான அதிகாரியை அலைக்கழிக்கலாமா?

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!


தினகரன்

தரைமட்ட அரசியல்

சென்னை, ஜூன்.19-

கீழடி விவகாரம் தொடர்பாக ஒன்றிய அரசு உள்ளடி அரசியல் நடத்துகிறது. ஒரு வரலாற்று உண்மையை வெளிப்படுத்தியதற்காக ஒரு நேர்மையான அதிகாரியான அமர்நாத் ராமகிருஷ்ணாவை நொய்டாவுக்கு இடமாற்றி அலைக்கழிக்கலாமா? என 'தினகரன்' நாளேடு 18.6.2025 தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

அகழாய்வு அறிக்கை தொடர்பான பிரச்னை மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. கடந்த 2014ம் ஆண்டு ஒன்றிய அரசு சார்பில் கீழடியில் நடந்த அகழாய்வில், பழந்தமிழர் நாகரிகம், அவர்கள் பயன்படுத்திய தொன்மை பொருட்கள் இருப்பதாக கண்டறியப்பட்டது. இந்திய தொல்பொருள் அகழாய்வு மையத்தின் தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முதலிரண்டு ஆண்டுகள் நடந்த அகழாய்வுகளில் சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்டது தமிழர்களின் நகர நாகரிகம் என்பது தெரிய வந்தது.

'தமிழர் நாகரிகமே முந்தையது' என்ற வரலாற்று ஆய்வை, எளிதாக பா.ஜ.க. அரசால் ஏற்க இயலவில்லை. இதையடுத்து அமர்நாத் ராமகிருஷ்ணாவை அதிரடியாக அசாம் மாநிலம், கவுஹாத்திக்கு மாற்றியது. இவருக்குப் பதிலாக நியமிக்க ப்பட்ட கண்காணிப்பாளர் கீழடி அகழாய்வில் மேற்கொண்ட 3வது அகழாய்வில் பெரியதாக எதுவுமே கிடைக்கவில்லை என்று கூறி, அகழாய்வை 'ஊத்தி மூடும்' அளவிற்கே அறிக்கை அனுப்பினார். இதையடுத்தே 4 ஆம் கட்ட அகழாய்வில் இருந்து, தமிழ்நாடு அரசு இப்பணியை ஏற்று நடத்தியது. தற்போது 10 ஆம் கட்ட அகழாய்வு வரை முடிந்துள்ளது.

முதலிரண்டு அகழாய்வு அறிக்கையை கடந்த 2023 ஆம் ஆண்டு ஒன்றிய தொல்லியல் துறைக்கு அனுப்பி வைத்தார் அமர்நாத் ராமகிருஷ்ணா. 2 ஆண்டுகள் இந்திய தொல்லியல்துறையிடம் 'ஆழ்ந்த உறக்கத்தில்' இருந்தது. தொடர்ந்து கேள்விகள் எழுந்ததும், சுதாரித்த பா.ஜ.க. அரசின் கலாச்சார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், "கீழடி ஆய்வறிக்கையை ஏற்க அறிவியல்பூர்வமான, தொழில்நுட்ப ரீதியிலான ஆய்வுகள் கூடுதலாக தேவை. சில வரைபடங்களில் தெளிவில்லை." அறிக்கையில் குறிப்பிட்டு ள்ள காலங்களுக்கு போதிய ஆதாரங்கள் தேவையென கூறியிருந்தார்.

அதற்கு அமர்நாத் ராமகிருஷ்ணா, "கீழடி ஆய்வறிக்கை சரியாகவே உள்ளது. கி.மு. 5 ஆம் நூற்றாண்டு முதல் கிமு 8 ஆம் நூற்றாண்டு காலம் தொடர்பான ஆய்வுகள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. திருத்தம் தேவையில்லை. அறிக்கையை தாக்கல் செய்து இரண்டரை ஆண்டுகள் கழித்து கேள்வி எழுப்பப்படுகிறது" என தெரிவித்திருந்தார். தமிழர் நாகரிகத்தைத் தரைமட்டமாக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்கள் கடும் கண்டனங்களை எழுப்பியிருந்த னர்.

அமர்நாத் ராமகிருஷ்ணா அறிக்கையை ஏற்றுக் கொள்வதற்கான நெருக்கடிகள் அதிகரிக்கும் சூழலில், அவரை தற்போது மீண்டுமொரு முறை அதிரடியாக இடமாற்றம் செய்துள்ளது ஒன்றிய அரசு. டெல்லில் பண்டைகால ஆய்வு மற்றும் தேசிய நினைவுச் சின்னங்கள், தொல்பொருள்கள் அமைப்பின் இயக்குநராக அமர்நாத் ராமகிருஷ்ணா, நொய்டாவுக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த மாற்றம் நிர்வாகரீதியிலானது அல்ல; கீழடி விவகாரம் தொடர்பாக ஒன்றிய அரசு நடத்தும் உள்ளடி அரசியல் போக்காகவே பார்க்கப்படுகிறது.

ஒன்றிய அரசு அதிகாரிகள், தங்களது கட்சிக் கொள்கைளின்படி செயல்பட வேண்டுமென விரும்புகிறதா பா.ஜ.க.? ஒரு வரலாற்று உண்மையை வெளிப்படுத்தியதற்காக, ஒரு நேர்மையான அதிகாரியை அலைக்கழிக்கலாமா? அதிகாரிகளை தட்டிக் கொடுத்து பாராட்ட வேண்டிய அரசு, அவர்களை பந்தாடுவது நியாயமாகுமா? அதிகாரி மாற்றத்தில் காட்டக்கூடிய ஆர்வத்தை, 2015ல் அறிவித்த எய்ம்ஸை கொண்டு வருவதில் காட்டியிருக்கலாமே? இனியாவது இதுபோன்ற தரைமட்ட அரசியலை பா.ஜ.க. கைவிட வேண்டுமென்பதே தமிழக கட்சிகள், மக்களின் வலியுறுத்தலாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.





உங்களை தேடி, உங்கள் ஊரில் நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ.,ஆகியோர் சிட்லபாக்கம் ஏரியில் கலங்கலின் மீது நடைபாலம், நடைபாதை இணைப்பு கூடுதல் மின்விளக்குகள் அமைத்தல் வாகனம் நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஆய்வு செய்து,விரைவில் திறப்பது குறித்து அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க. வசந்தகுமாரி,மாநகர துணை மேயர் கோ.காமராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் மா.கணேஷ்குமார், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலசந்தர் இ.ஆ.ப.,கூடுதல் ஆட்சியர் வி.எஸ்.நாராயணசர்மா தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் என்.முரளி, செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ்,க. தேவந்திரன்,இ.மனோகரன்,அரசு உயர் அலுவலர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.